**<u>OS. No. 6 /2022</u>**

D.W.1 - **மகாலட்சுமி**

தேதி: 12.02.2024

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

2ம் பிரதிவாதி இந்த நீதிமன்றத்தில் என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதுபோல் 2ம் பிரதிவாதியின் மனைவியும் இதே நீதிமன்றத்தில் என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கும் அவருடைய மனைவிக்கும் நான் எழுதிக்கொடுத்த கிரைய ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யப்பட்டது தான். மேற்படி 2ம் பிரதிவாதி என் மீது இந்த நீதிமன்றத்தல் அ வ எண் 53/2022 மற்றும் அவருடைய மனைவி இந்த நீதிமன்றத்தில் என் மீது தாக்கல் செய்த வழக்கு அ வ எண் 49/2022 என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் மனைவி பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்த பத்திரத்தின் அடிப்படையில் தான் என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதியிடம் எனது கணவர் ரூ.5,00,000/– கடனாக வாங்கியிருந்தார். என் கணவர் என்னிடம் எழுதப்படாத பேப்பரில் தான் கையொப்பம் வாங்கி சென்றார். மேற்படி 2ம் பிரதிவாதிக்கும் அவருடைய மனைவிக்கும் நான் எழுதிக்கொடுத்துள்ள பதிவு செய்த கிரைய ஒப்பந்த பத்திரத்திற்கு முன்பு அல்லது பின்னிட்டு என் கணவர் எழுதப்படாத பேப்பரில் என்னிடம் கையொப்பம் பெற்றுசென்றாரா என்றால் எனக்கு தெரியாது. என் கணவருக்கு தான் தெரியும். 2ம் பிரதிவாதியும் அவருடைய மனைவியும் கொடுத்த பணத்தை வைத்து கடனை நாங்கள் அடைத்தோம். நான் வாதியுடன் சேர்ந்து 2ம் பிரதிவாதியும் அவருடைய மனைவியும் தாக்கல் செய்த வழக்கிற்காக தாவா கிரைய ஒப்பந்தம் தயார் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ளது என்னுடைய கையொப்பம் தான். அதில் சாட்சி கையொப்பம் செய்துள்ள இடத்தில் கண்டுள்ள கையொப்பம் என்னுடைய கணவருடையது தான். நான் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கையொப்பம் செய்தபோது வாதி கேட்பு வரைவோலை மூலம் வேலூர் ஐ டி எப் சி வங்கியில் நான் வாங்கிய கடனுக்காக பணம் கொடுத்தாரா என்றால் என் கணவருக்கு தான் தெரியும். அந்த நேரத்தில் என்னுடைய சொத்திற்கான பத்திரம் மேற்படி வேலூர் ஐ டி எப் சி வங்கியில் அடமானத்தில் இருந்தது. மேற்படி அடமான சொத்தை சென்னை டி ஆர் டி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து வங்கி ஏலத்தில் கொண்டுவந்தார்களா என்றால் ஏலத்திற்கு வரவில்லை. வழக்கு மட்டும் போட்டுள்ளார்கள். மேற்படி கடனை செலுத்துவதற்காக தான் நான் வாதியிடம் இருந்து பணம் பெற்றேன் என்றால் என் கணவர் தான் பணம் வாங்கினார். நான் முதன் முதலில் நஸ்ரின் பேகம் என்ற வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுத்தேன். அந்த அறிவிப்பு என்னிடம் காட்டப்படுவது தான். அந்த அறிவிப்பு **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த அறிவிப்புக்கு வாதி எங்களுக்கு ஒரு பதில் அறிவிப்பு கொடுத்தார். அந்த பதில் அறிவிப்பு என்னிடம் காட்டப்படுவது தான். அந்த பதில் அறிவிப்பு **வா.சா.ஆ.7** ஆகும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள முத்திரை தாள்களில் நான் ஆகஸ்டு மாதம் 2019 ம் வருடத்தில் கையொப்பம் செய்தேன். அதன் பிறகு கொரானா நோய் தாக்குதலின் காரணமாக 2 வருடங்களுக்கு எல்லாம் முடங்கி போய்விட்டது என்றால் சரிதான். கொரானா காலம் முடிந்தவுடன் வாதி என்னிடம் அட்வான்ஸ் வாங்கியுள்ளீர்கள் சொத்து எழுதி தருமாறு கேட்டார். ஆனால் நான் கடனாக தான் வாங்கினேன். அவ்வாறு வாதி கேட்டவுடன் நாங்கள் திருமதி.நஸ்ரின் பேகம் வழக்கறிஞர் மூலம் வழக்கறிஞர் அறிவிப்பை வாதிக்கு கொடுத்தோம். நான் முதலில் வாதியிடம் கடனாக பணம் வாங்கினேன். அதன் பிறகு 3 வருடங்கள் கழித்து 2 ம் பிரதிவாதியிடம் பணம் வாங்கினேன். வாதியிடம் வாங்கிய பணத்தை திருப்பி கொடுத்ததற்கு என்னிடம் ஆவணம் இல்லை. ஏனென்றால்

வாதி ரசீது கொடுக்கவில்லை. நான் வாதியிடம் கடன் எதுவும் வாங்கவில்லை என்றும் நான் கிரைய ஒப்பந்தம் போட்டு முன்பணம் தான் பெற்றேன் என்றால் சரியல்ல. நான் தற்போது வாதியை ஏமாற்றுவதற்கு வேறொரு நபரிடம் ஒப்பந்தம் போட்டுவிட்டு பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி ஒப்பந்தம் போட்டு கொரானா காலம் முடிந்தவுடன் மீதி தொகையை செலுத்தி பத்திரம் பதிவு செய்துகொள்ள தயாராக இருந்து பலமுறை அணுகி கேட்டார் என்றால் சரியல்ல. அதன் பிறகு நான் வேறு நபருக்கு கிரைய ஒப்பந்தம் போட்டதால் வாதி கிரைய தொகையை வட்டியுடன் செலுத்துமாறு வழக்கு போட்டுள்ளார் என்றால் நான் திரும்ப செலுத்திவிட்டேன்.

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH